Register No. | | | | | | | | |

**TA2A** **5855–23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three – year Regular Course)

First Year – Second Semester

LAW OF CONTRACTS - II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define the contract of indemnity. Distinguish between the contract of guarantee and contract of indemnity.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தை வரையறை செய்க. ஈட்டுறுதி மற்றும் பொறுப்புறுதிக்குள்ள ஒப்பந்தங்களின் வேற்றுமைகளை விளக்குக.

2. Explain three-tier Consumer Disputes Redressal Machinery, established under the Consumer Protection Act. Discuss the composition and jurisdiction of the National Commission. Where can an appeal lie against the order of the National Commission?

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மூன்று அமைப்பு கொண்ட நுகர்வோர் குறைதீர் மையத்தினை விளக்குக. தேசீய நுகர்வோர் ஆணையத்தின் அமைப்பு, மற்றும் ஆள் வரம்புகையினை விளக்குக. இந்த தேசீய நுகர்வோர் ஆணைய உத்தரவிற்கு எதிராக எங்கு மேல் முறையீடு தாக்கல் செய்ய முடியும்?

3. Explain the conditions and warranties in a contract of Sale of Goods with decided case laws.

சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள கட்டு வரம்புகள் மற்றும் நம்புறுதிகள் ஆகியவற்றை தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் கொண்டு விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the remedies, available to the seller and buyer under the Sale of Goods Act?

சரக்கு விற்பனை சட்டத்தின் கீழ் விற்பவர் மற்றும் வாங்குபவர்களின் தீர்வழிகள் என்ன என்பதனை விவரி.

5. What do you understand by the term "caveat emptor"? State the rights and the obligations of finder of lost goods.

"வாங்குபவனே விழித்திரு" என்ற கோட்பாட்டின் மூலம் என்ன புரிந்து கொள்கிறீர்கள்? இழந்த பொருட்களை கண்டுபிடித்தவரின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி விவரி.

6. Discuss the various ways by which partnership may be terminated.

கூட்டாண்மை எந்தெந்த வழிகளில் இரத்து செய்யப்படுகிறது என்பதினை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Agent's personal liability

முகவரின் தனிப்பட்ட பொறுப்படைவு

(b) Various kinds of guarantee

பொறுப்புறுதியின் பல்வேறு வகைகள்

(c) Sale by non owners

உரிமை அல்லாதோரின் விற்பனை

(d) Unfair Trade Practice and Restrictive Trade Practice

நேர்மையற்ற வணிக பழக்கம் மற்றும் கட்டுப்படுத்தக் கூடிய வணிக பழக்கம்

(e) Essential ingredients of pledge

அடகிற்குரிய தேவையான கூறுகள்

(f) Consequences for non-registration of partnership

பதிவு செய்யப்படாத கூட்டாண்மையின் விளைவுகள்

(g) Rights of Pawnor

அடகு வைப்பவரின் உரிமைகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A' purchased a gold chain from 'B' by exercising undue influence and pledged it with 'C'. Is the Pledge valid as per law?

'அ' என்பவர் தகாதநிலை வற்புறுத்துதலின் பேரில் 'ஆ' விடமிருந்து தங்க சங்கிலியை வாங்கி 'இ' என்பவரிடம் அடகு வைக்கிறார். அந்த அடகு - சட்டப்படி செல்லத்தக்கதா?

9. 'A' asks 'B' to beat 'C' by promising to indemnify him against the consequences. In order to that, 'B' beats 'C' and the court fined Rs. 5,000/-. Can 'B' recover the amount from 'A'? Decide.

'அ' என்பவர் 'ஆ' விடம் 'இ' என்பவரை அடிக்கச் சொல்கிறார். அதனால் ஏற்படும் விளைவுகளை ஈடு செய்வதாக 'அ' உறுதியளிக்கிறார். இதன் பொருட்டு 'ஆ' என்பவர் 'இ' என்பவரை அடிக்கிறார். இவருக்கு நீதிமன்றம் ரூ. 5,000/- அபராதம் விதிக்கின்றது. 'ஆ' என்பவர் இத்தொகையினை 'அ' விடமிருந்து திரும்ப பெற இயலுமா? தீர்மானிக்கவும்.

10. 'A' purchased a Xerox Machine for self employment. The machine is defective at the time when it was purchased. Can 'A' file a complaint under the Consumer Protection Act? Will he succeed in this case. Discuss.

'அ' என்பவர் தமது சுயவேலைக்காக ஒரு ஜெராக்ஸ் இயந்திரத்தினை விலைக்கு வாங்குகிறார். இதனை விலைக்கு வாங்கும் சமயம் அந்த இயந்திரம் பழுதுள்ளதாக இருக்கின்றது. இதன் காரணமாக 'அ' புகார் மனுவினை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்கிறார். 'அ' இவ்வழக்கில் வெற்றியடைவாரா? விவரி.

---

Register No. | | | | | | | | |

**TA2B**

5856–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – Second Semester

## PROPERTY LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. All transfers dealt with under the Transfer of Property Act, 1882 are transfer of some or all the rights of ownership in immovable property – Explain.

   1882–ஆம் ஆண்டின் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் கீழ் வரும் அனைத்து வகையான உரிமை மாற்றங்களும் ஒரு அசையாச் சொத்தில் உள்ள ஒரு சில உரிமைகளையோ அல்லது அனைத்து உரிமைகளையுமோ மாற்றியளிப்பதாக அமைந்துள்ளன – விளக்குக.

2. Distinguish in Law and Equity, the nature of covenants running with the land.

   சட்டத்தின் படியும் தகைமை நெறிமுறையின் படியும் நிலத்துடன் இணைந்து செல்லும் வரைமொழி ஒப்பந்தங்கள் பற்றிக் கூறி அவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

3. Define 'Lease'. Differentiate it from licence. Bring out the rights and liabilities of the lessor and lessee.

   'குத்தகை' என்பதை வரையறு. 'உரிமம்' என்பதிலிருந்து வேறுபடுத்து. குத்தகை அளித்தவர் மற்றும் குத்தகை பெற்றவர் ஆகியோரின் உரிமைகளையும் கடமைகளையும் வெளிக் கொணர்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. The doctrine of holding out resolves the dispute which arises when the rights of innocent persons come into conflict – Elucidate.

   இரண்டு நிரபராதிகளின் உரிமைகள் சம்பந்தமான சச்சரவு எழும்போது 'வெளித்தோற்ற உரிமையாளர்' கோட்பாடு அதனைத் தீர்க்கிறது – விளக்கி எழுதுக.

5. How easements are acquired and transferred? Explain.

வசதியுரிமைகள் எவ்வாறு பெறப்படுகின்றன மற்றும் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன என்பதை விளக்குக.

6. Write about the special nature of Quasi Easements.

வசதியுரிமைப் போல்வு பற்றிய சிறப்புத் தன்மையைக் குறிப்பிட்டு எழுதுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Notice

அறிவிப்பு

(b) Transfer of property to unborn person

பிறவாத நபருக்கு சொத்துரிமை மாற்றம் செய்தல்

(c) Maddison - vs - Alderson

மாடிசன் - எதிர் - ஆல்டர்சன்

(d) Once a mortgage always a mortgage

ஒருமுறை அடைமானமென்றால் எப்போதும் அடைமானம் தான்

(e) Exchange

பரிமாற்றம்

(f) Actionable claims

தொடர் தகு பாத்தியங்கள்

(g) Caveat Emptor

வாங்குபவனே விழித்திரு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' leases his land to 'B'. After sometime, A transfers the right to re-entry into the land to 'C'. Is the transfer valid? Decide.

'A' என்பவர் தனது நிலத்தை 'B' க்கு குத்தகைக்கு கொடுக்கிறார். சில காலம் கழித்து நிலத்தில் நுழையும் உரிமையை 'C' க்கு மாற்றம் செய்கிறார். இஃது செல்லுமா? முடிவு செய்க.

9. 'X' and 'Y' want to exchange their properties. X's property in worth about 20 lakhs. Y's property is of the value of 25 lakhs. How can they transfer?

X மற்றும் Y என்போர் தங்களது சொத்துக்களை பரிமாற்றம் செய்து கொள்ள விரும்புகின்றனர். ஆனால் X-ன் சொத்தின் மதிப்பு 20 லட்சமாகும். 'Y'-ன் சொத்தின் மதிப்பு 25 லட்சமாக மதிப்பிடப்படுகிறது. அவர்கள் எவ்வாறு பரிமாற்றம் செய்து கொள்ளலாம்?

10. 'A' has an easement to lay pipes in 'B's land to take water to his land. 'A' entered into 'B's land and dug the land to mend pipes. After that, A did not restore the surface to the proper state. What is the remedy to 'B'?

'A' என்பவர் 'B' என்பவரின் நிலத்திலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் எடுக்கும் வசதியுரிமையைப் பெற்றிருந்தார். ஒரு முறை நிலத்தைத் தோண்டி குழாய்களைப் பதித்த பின்னர் நிலத்தை சரியாக மூடாமல் பழைய நிலையில் வைக்காமல் சீர் செய்யாமல் சென்றுவிட்டார். 'B' க்கு உள்ள தீர்வு என்ன?

———

Register No. | | | | | | | | |

# TA2C

**5890-23**

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – Second Semester

CONSTITUTIONAL LAW – I

Time : 2 ½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. The Indian Constitution contains both the federal and unitary features of the Constitution. Substantiate the statement.

   இந்திய அரசமைப்பு கூட்டாட்சி அரசமைப்பு மற்றும் ஒற்றையாட்சி அரசமைப்பு ஆகிய இரண்டு அம்சங்களையும் கொண்டுள்ளது. அறிக்கையை நிரூபிக்கவும்.

2. Explain the provisions relating to Protective Discrimination under the Constitution of India with the help of decided cases.

   தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியுடன் இந்திய அரசமைப்பின் கீழ் பாதுகாப்புடைய பாகுபாடு தொடர்பான விதிகளை விளக்குக.

3. Explain with decided cases the rights accorded to minorities under the Constitution of India.

   இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the principles of equality as laid down under Article 14 of the Constitution of India?

   இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 14வது ஷரத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவக் கொள்கைகளை விளக்குங்கள்?

5. Explain the theory of basic structure with reference to decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு அடிப்படைக் கட்டமைப்பின் கோட்பாட்டை விளக்குக.

6. Analyse the different modes of acquisition of Citizenship under the Indian Citizenship Act, 1955?

இந்திய குடியுரிமைச் சட்டம் 1955ன் கீழ் குடியுரிமை பெறுவதற்கான பல்வேறு முறைகளைப் பகுப்பாய்வு செய்யவும்?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Abolition of Titles.

பட்டங்களை ஒழித்தல்.

(b) Overseas Citizenship.

வெளிநாட்டு குடியுரிமை.

(c) Judicial Review.

நீதித்துறை மறு ஆய்வு

(d) Protection against Self-incrimination.

குற்றச்சாட்டிற்குத் தன்னையே உள்ளாக்குதலில் இருந்து பாதுகாப்பு.

(e) Right to Education.

கல்விக்கான உரிமை.

(f) Doctrine of waiver.

அடிப்படை உரிமைகள் இடை நிறுத்தம்.

(g) R.D. Shetty v. The International Airport authority of India. 1979 AIR 1628.

ஆர்.டி. ஷெட்டி எதிர் இந்திய சர்வதேச விமான நிலைய ஆணையம் 1979 AIR 1628.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'C' was sentenced to death, but his death sentence was not executed for 10 years and therefore he demands for quashing of his death sentence. Examine the validity of his contention.

'C' என்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டு, 10 வருடங்கள் ஆகியும் அத்தண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஆகவே 'C' என்பவர் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையினை ரத்து செய்ய வேண்டும் என வாதிடுகிறார். அவருடைய வாதம் செல்லுமா என்பதை விவாதிக்கவும்.

Register No. | | | | | | | | |

**TA2D** **5891–23**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – Second Semester

FAMILY LAW – II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the powers of a Muslim to make a will of his property. State the difference between Hanafi and Shia law.

ஒரு முகமதியரின் உயில் உருவாக்கும் அதிகாரங்களை விளக்குக. ஹனபி மற்றும் ஷியா சட்டத்தில் இருக்கும் வேறுபாடுகளைக் கூறுக.

2. Explain the various rules under the Indian Succession Act, 1925 relating to intestate succession.

1925-ஆம் ஆண்டு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் உயில் எழுதாமல் போன இறங்குரிமை சம்பந்தப்பட்ட வெவ்வேறான விதிகளை விவரி.

3. Examine the powers of Karta in the management of Hindu Joint Family property.

இந்து கூட்டுக் குடும்பச் சொத்தை மேலாண்மையாற்றுவதில் தலைமையரின் அதிகாரங்களை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the rules relating to Succession of Male Hindu under the Hindu Succession Act 1956.

1956-ஆம் ஆண்டின் இந்து இறங்குரிமைச் சட்டத்தில் உள்ள ஆண்களுக்கான இறங்குரிமை குறித்த விதிகளை விளக்குக.

5. Explain briefly about Stridhana property.

சீதனச் சொத்தைப் பற்றி சுருக்கமாக விளக்கவும்.

6. Discuss the rules of Hanafi law of Inheritance.

ஹனபி இறங்குரிமை சட்டத்தின் கீழ் உள்ள விதிகளை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on <u>FIVE</u> of the following :

பின்வருவனவற்றுள் <u>ஐந்திற்கு</u> சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Doctrine of Radd

மீட்டளிப்பு கோட்பாடு

(b) Class I heirs

முதல் வகுப்பு வாரிசுகள்

(c) Residuaries

எஞ்சுநர்கள்

(d) Kinds of Legacy

உயில் வழிக் கொடையின் வகைகள்

(e) Women's estate

பெண்ணுரிமை சொத்து

(f) Reopening of partition

பாகப் பிரிவினையை மீண்டும் திறத்தல்

(g) Arm Chair Rule

சாய்வு நாற்காலி விதி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் <u>இரண்டிற்கு</u> சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Sunni Muslim died leaving her husband, mother, father, daughter and brother. Distribute her properties to those heirs.

ஒரு சன்னி இசுலாமியர் தன் கணவர், தாய், தந்தை, மகள் மற்றும் சகோதரர் ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறார். அவருடைய சொத்துக்களை அவரது இறங்குரிமையர்களுக்கு பங்கிடுக.

legacy?

'அ' என்பவர் தனது சொத்தினை 'ஆ' என்பவருக்கு உயில் வழியாக தருகிறார். 'ஆ' என்பவர் 'அ'விற்கு முன்னால் இறந்து விடுகிறார். உயில்வழிக் கொடைக்கு என்ன நேரிடும்?

10. Raj a male Hindu dies leaving behind his mother, widow, two sons and an illegitimate daughter. Distribute his property.

ராஜ் என்ற இந்து ஆண் தனது தாய், விதவை, 2 மகன்கள் மற்றும் ஒரு முறையில்லா மணப்பிறப்பு மகள் ஆகியோரை விட்டு இறந்துவிட்டார். இறந்தவர் சொத்தை பகிரவும்.